## திருவண்ணாமலை மாநகர தி.மு.க. சார்பில்

# முத்தமிழறிஞர் கலைஞர் 8வது நினைவு நாள் - அமைதி ஊர்வலம்!

## டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் நடைபெற்றது!

திருவண்ணாமலை, ஆக. 8–

திருவண்ணாமலை மாநகர திமுக சார்பில், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெறவுள்ளது. ஊர்வலத்தில் கலந்து கொண்டு, கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்.

07.08.2026 வெள்ளிக்கிழமை காலை 8.00மணிக்கு, திருவண்ணாமலை, அறிவொளிப் பூங்கா அருகிலிருந்து முத்த மிழறிஞர் கலைஞர் அவர்களின் 8வது நினைவு நாள் அமைதி ஊர்வலம் நடைபெற்றது. ஊர்வலத்திற்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமை வகித்தார்.

ஊர்வலத்தில் மாவட்ட அவைத் தலைவர் கோ.கண்ணன், தலைமை செயற்குழு உறுப்பினர் இரா.ஸ்ரீதரன், மாவட்ட பொருளாளர் எஸ்.பன்னீர்செல்வம், மாவட்ட துணை செயலாளர்கள் ப்ரியா ப.விஜயரங்கன், விஜயலட்சுமி ரமேஷ், மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் க.சௌந்தரராசன், அமைப்புசாரா தொமுச., ஏ.ஏ.ஆறுமுகம், துணை மேயர் சு. ராஜாங்கம் ஆகியோர் முன்னிலை வகித்தனர். நினைவு நாள் அமைதி ஊர்வல ஏற்பாடுகளை மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் செய்திருந்தார்.

அமைதி ஊர்வலம் அறிவொளி பூங்காவில் தொடங்கி, போளூர் ரோடு வழியாக அண்ணா நுழைவு வாயில் அருகில் இருக்கும், முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் சிலையை சென்றடைந்தது. அவரது திருவுருவச் சிலைக்கு கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். கழக முன்னோடிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர்.

நினைவு நாள் ஊர்வலத்தில் மாவட்ட அமைப்பாளர்கள் டி.வி.எம். நேரு, காலேஜ் கு.ரவி, ஜெ.மெய்கண்டன், கு.கணேஷ், சி.ராம்காந்த், பச்சையம்மன் எஸ்.முத்து, இரா. கார்த்திகேயன், டாக்டர் பிரவீன்ஸ்ரீதரன், பாலமுரளிகிருஷ்ணா, ஏ.டபள்யு.சர்தார் காசீம், எஸ்.டி.ஆர்.எஸ்.பாபு, பி.கே.ஏ. அருண், இரா.ஜோதி, இரா.அன்பரசு, பவர்.வ.அன்பரசு, என்.மாசிலாமணி, கற்பகம்சரவணன், உ. நித்யா, டாஸ்மாக் இரா.ஆறுமுகம்,

ஒன்றிய செயலாளர்கள் மெய்யூர்.சந்திரன், த.ரமணன், பெ. கோவிந்தன், மாநகர பகுதி செயலாளர்கள் சு.விஜி (எ) விஜயராஜ், அ.கோவிந்தன், ந.சீனுவாசன், குட்டி க.புகழேந்தி, சி.சண்முகம், பா.ஷெரீப் மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எஸ். கண்ணதாசன், மாநகர துணை செயலாளர்கள் மு.கருணாமூர்த்தி, வட்டி அருணாச்சலம், ஜீவரேகாவிஜயராஜ், மாவட்ட பிரதிநிதிகள் இல.குணசேகரன், அ.கண்ணன், கோல்டு.எஸ். பிரபு, ஹக்கிம்சேட், மாநகர அமைப்பாளர்கள் மண்டி ஆ.பிரகாஷ், எம். குணாளன், அ.மோகன்ராஜ் மற்றும் மாவட்ட, மாநகர, ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், அணி சார்ந்த அமைப்பின் நிர்வாகிகள், கழக முன்னோடிகள் உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

ஊர்வல முடிவில் 500க்கும் மேற்பட்ட பொதுமக்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது.

# "படி"ப்படியாய்



"முன்ன பின்ன பேப்பர் படிச்சிருந்தா தெரியும்ங்கிறாரு முதலமைச்சர் விஜய்..

அவருக்குத் தெரியலயோ

நாற்றாண்டை நோக்கி நடைபோடும் "முரசொலி"யை பொறுப்பேற்று நடத்தி வருவதே உதயநிதி ஸ்டாலின் தான் என்பது...

அதனால...
பேப்பர் படிக்கணும்

அதோட பேப்பர்களை நடத்துறது யாருங்கிறதயும் விஜய் படிக்கணும்...

என்னநாஞ் சொல்றது...



மருது அழகுராஜ்
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்



முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 8ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு, விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு அலங்கரிக்கப்பட்ட கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு தூத்துக்குடி வடக்கு மாவட்ட செயலாளர் கீதாஜீவன் அறிவுறுத்தலின்படி, விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர்,ஜீ.வி.மார்க்கண்டேயன் ஆலோசனையின்படி தி.மு.க. நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினர். நிகழ்வில் ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்புராஜன், இம்மானுவேல், பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், மாவட்ட பிரதிநிதிகள் கனகவேல், கிருஷ்ணகுமார், ராமலிங்கம், தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் ஸ்ரீதர், உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



சிவகங்கை மாவட்டம் தேவகோட்டையில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8வது நினைவு நாளை முன்னிட்டு அவரது திருவுருவப் படத்திற்கு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நாகினி செந்தில் குமார் தலைமையில் பொதுக் குழு உறுப்பினர் ஜெ.மதார்சேட் முன்னிலையில் நிர்வாகிகள் ஜாகிர்உசேன்பொருளாளர் தமிழ்ச் செல்வன்,கருணாநிதி இலக்கிய அணி அழகையா, சேவியர் மனோகரன் உட்பட நிர்வாகிகள் மலர் தூவி மரியாதை செலுத்தினார்கள்.



கலைஞர் அவர்களின் 8 ஆம் ஆண்டு நினைவுநாளையொட்டி திண்டுக்கல் மாவட்ட தி.மு.க. அலுவலகமான கலைஞர் மாளிகையில் நினைவஞ்சலி நடைபெற்றது. இந்நிகழ்வில் மாநகர செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி, மாவட்ட அவைத்தலைவர் காமாட்சி, துணை செயலாளர்கள் நாகராஜன், மார்கிரேட் மேரி, பொருளாளர் சத்தியமூர்த்தி, முன்னாள் எம்.எல். ஏ. காந்திராஜன், ஒன்றிய செயலாளர்கள் சிவகுருசாமி, நெடுஞ்செழியன்,வெள்ளிமலை, மாநகர துணை செயலாளர் அழகர்சாமி, பொருளாளர் மீடியா சரவணன், பகுதி கழக பொறுப்பாளர்கள் ஜானகிராமன்,ராஜேந்திரகுமார், சூசை, பஜ்லுல்ஹக், சந்திரசேகர், பொதுக்குழு உறுப்பினர் அக்பர்,மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் கணேசன்,மாவட்ட விவசாய அணி கண்ணன், இலக்கிய அணி முருகானந்தம், மண்டல தலைவர்கள் ஆனந்த், ஜான், மாமன்ற உறுப்பினர்கள் விஜயா, அருள்வாணி,விமலா மேரி, தெரசாமேரி, ஜெயந்தி, செந்தில், ஸ்டெல்லா, வார்டு செயலாளர்கள், சார்பு அணி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## ஒன்றுக்கும் உதவாத -

# மாற்றுத்திறனாளிகளையும் மோசம் செய்த வெற்று த.வெ.க. பட்ஜெட்!

## தி.மு.க. மாற்றுத் திறனாளிகள் அணிச் செயலாளர் பேராசிரியர் தீபக் நாதன் அறிக்கை!

சென்னை, ஆக. 8 –

கழக மாற்றுத் திறனாளி கள் அணி செயலாளர் பேரா.தீபக்நாதன் விடுத் துள்ள அறிக்கை வருமாறு:



முழுக்க முழுக்க மோசடியால் நடந்து முடிந்த 2026 சட்டமன்றத் தேர்தலில் வெகு மக்களுக்கு பல பொய்யான வாக்குறுதிகளை தந்தது ஏமாற்றியது போல் மாற்றுத்திறனாளி களுக்கும் பளபளப்பாய் பல பொய் வாக்குறுதிகளை அள்ளி வீசி சோபா விற்று ஆட்சிக்கு வந்த முதலமைச்சர் விஜய் தாக்கல் செய்திருக்கும் பட்ஜெட்டில் அவர் தந்த வாக்குறுதிகள் குறித்த எந்த அறிவிப்பும் செய்யப்படாதது உண்மையில் மாற்றுத்திறனாளி சமூகத்திற்கு பெருத்த ஏமாற்றத்தை தந்திருக்கிறது.

**திராவிட மாடல் அரசில் மாற்றுத்திறனாளிகள்:**

கடந்த 2021–ல் திராவிட முன்னேற்றக் கழக தேர்தல் அறிக்கையில் மாற்றுத்திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகையை 1500 ரூபாயாக உயர்த்தி தருவதாக சொல்லிய கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 2021 ஆட்சி அமைந்த உடன் வாக்குறுதிபடி ஆயிரம் ரூபாய் உதவித்தொகை பெற்று வந்த மாற்றுத்திறனாளிகளுக்கு 1500 ரூபாயும் 1500 ரூபாய் பெற்று வந்த கடுமையாக பாதிக்கப்பட்ட மாற்றுத்திறனாளிகளுக்கு ரூபாய் 2000 ஆக உதவித்தொகை உயர்த்தி வழங்கினார். அதேபோல் கடந்த 2026 சட்டமன்ற தேர்தல் வாக்குறுதியில் மாதாந்திர உதவித் தொகை 1500 இல் இருந்து 2500 ஆக உயர்த்தி வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருந்தது ஒருவேளை மீண்டும் திராவிட மாடல் ஆட்சி அமைந்திருந்தால் சொன்னபடி மாற்றுத்திறனாளிகளுக்கு உதவித் தொகை இந்நேரம் உயர்த்தி வழங்கப்பட்டிருக்கும் என்பதற்கு 2021 வாக்குறுதி நிறைவேற்றமே சான்று.

**ரூபாய் 1472 கோடி ஒதுக்கிய திராவிட மாடல் அரசு:**

மாற்றுத் திறனாளிகள் மேம்பாட்டிற்கு ஒட்டுமொத்த இந்தியாவிற்கு ஒன்றிய அரசு ஒதுக்கிய நிதி 1400 கோடி ரூபாயாக இருக்க திராவிட மாடல் ஆட்சியில் தமிழ்நாட்டில் மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டிற்கு அதிகப்படியான நிதி ஒதுக்கீடாய் ஒட்டுமொத்த இந்தியாவிற்கான நிதி ஒதுக்கீட்டை விட 72 கோடி கூடுதலாக ரூபாய் 1472 ஒதுக்கப்பட்டு மாற்றுத்திறனாளிகள் வாழ்வு வளம் பெற முன் எப்போதும் இல்லாதபடி பல்வேறு திட்டங்கள் தீட்டப்பட்டு செயல்படுத்தப்பட்டன அதன் விளைவாக பள்ளி கல்லூரி பயிலும் மாற்றுத்திறனாளி மாணவர்களுக்கு கட்டண சலுகை, பொறியியல் மற்றும் மருத்துவ ம் பயிலும் மாற்றுத் திறனாளிகளுக்கு கட்டணத்தில் இருந்து விலக்கு, தொழிற்பயிற்சி, சுய தொழில் தொடங்க நிதி உதவி, நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தில் வீடு ஒதுக்கீடு, சர்வதேச தரத்திலான உதவி உபகரணங்கள் மேம்படுத்தப்பட்ட சக்கரம் பொருத்திய பெட்ரோல் ஸ்கூட்டர்கள் ஒரு லட்சம் ரூபாய்க் கும் அதிகமான விலை கொண்ட ஸ்டேரிங் பொருத்தப்பட்ட தானியங்கி சக்கர நாற்காலிகள், காப்பீட்டு திட்டங்கள், திருமண உதவித்தொகை, மாற்றுத் திறனாளிகள் குழந்தைகளின் படிப்புக்கான உதவித்தொகை என இன்னும் என்னிலடங்க நலத்திட்டங்களை மாநில முழுவதும் இருக்கும் மாற்றுத்திறனாளி கள் பல்வேறு அரசு உதவிகளைப் பெற்று பயனடைந்தனர்.

**மாற்றுத்திறனாளிகளை ஏமாற்றிய விஜய் அரசு:**

மாற்றுத் திறனாளிகள் வாழ்க்கையைப் பற்றி எவ்வித புரிதலும் இல்லாமல் ஆட்சிக்கு வந்தால் மாதாந்திர உதவித்தொகை 3000 உயர்த்தி வழங்கப்படும் என வாக்குறுதி அளித்த விஜய் அவர்களின் தவெக இன்று ஆட்சிக்கு வந்த பின்பு தாக்கல் செய்யப்பட்டுள்ள பட்ஜெட்டில் அது பற்றி எந்தவித அறிவிப்பும் இல்லாமல் கடந்து சென்றிருப்பது த.வெ.க. வின் ஏமாற்று வேலையை வெட்ட வெளிச்சப் படுத்தி காட்டுகிறது உதவித்தொகை உயர்த்தி வழங்கப்படும் என்று காத்திருந்த மாற்றுத்திறனாளிகள் உள்ளங்களில் இருளை ஏற்படுத்தி இருக்கிறது.

**பொய் பரப்பிய விஜய் அரசு:**

உண்மையில் எதுவுமே செய்யாமல் விஜய் அவர்கள் மாற்றுத்திறனாளி களுக்கான மாதாந்திர உதவித்தொகையை உயர்த்தி வழங்க உத்தரவிட்டுள்ளார் என்று பொய் சுனாமி மூலம் இந்த மாநிலத்தையே சுருட்டி வாரி இன்று இருளில் தள்ளிய ரூட் மாபியா மூலம் பொய் செய்தி கசிய விடப்பட்டு விஜய் அவர்களுக்கு போலி பிம்பம் உருவாக்கும் வேலையை சில கூலிக்கு மாரடிக்கும் அமைப்புகளை கொண்டு நடத்தப்பட்டது ஆனால் இன்று அத்தனையும் பொய் என்று இந்த பட்ஜெட் பல் இளித்து நிற்கிறது.

இந்த அரசு மாற்றுத்திறனாளிகளின் வாழ்வியல் மற்றும் உரிமை சார்ந்த பார்வை இல்லாமல் கழி விறக்க பார்வையோடு செயல்படுகிறது என்பதற்கு இது மேலும் உறுதியான சான்றாகும். எனவே இது போல் தங்கள் புத்திக்கு எட்டாத வேலைகளை செய்து மாற்றுத்திறனாளிகளை பாதிப்புக்கு உள்ளாக்குவதை விடுத்து அறிவந்தவர்களின் ஆலோசனையை பெற்று ஆக்கபூர்வமான திட்டங்களை தீட்ட வேண்டும்.

மேலும் வெகு மக்களை ஏமாற்றுவது போல் விளிம்பு நிலை மாற்றுத்திறனாளிகளையும் ஏமாற்ற நினைக்காமல் தேர்தல் அறிக்கையில் வாக்குறுதி அளித்தபடி மாற்றுத்திறனாளிகள் மாதாந்திர உதவித் தொகையை 3000 ஆக உயர்த்தி உடனே அறிவித்திடவும் இன்று அறிவிக்கப்பட்டிருக்கும் நம்பிக்கை இல்லம் திட்டத்தை உடனே கைவிட வேண்டும் என்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாற்றுத் திறனாளிகள் அணி வலியுறுத்துகிறது.

**எதுவுமே செய்யாத த.வெ.க. அரசு:**

மொத்தத்தில் நேற்று முன்தினம் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டிருக்கும் பட்ஜெட் என்பது மாற்றுத் திறனாளிகள் வாழ்வில் துளி அளவு கூட மாற்றத்தை நலனை கருத்தில் கொள்ளாமல் அறிவிக்கப்பட்டு இருக்கும் வெற்று பட்ஜெட் என்பதையும் மாற்றுத்திறனாளிகளுக்கென எதையுமே செய்யாமல் பெரிதாய் எதையோ செய்து விட்டது போல பொய் பிம்பத்தை காட்ட முற்பட்டிருக்கும் வெற்று வேட்டு என்பதை திராவிட முன்னேற்ற கழக மாற்றுத்திறனாளர் அணி இந்த அரசின் போலித்தனத்தை சமூகத்திற்கு தோலுரித்துக் காட்டும் என்பதையும் இந்த ஒன்றுக்கும் உதவ பட்ஜெட்டிற்கு தனது கடுமையான கண்டனத்தை இங்கே பதிவு செய்கிறது.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



சிவகங்கை மாவட்டம் காரைக்குடி மாநகர கழகத் தின் சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 8வதுஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு முதியோர் இல்லத்தில் காரைக்குடி மாநகர செயலாளர் துணை மேயர் நா.குணசேகரன் தலைமையில் மதிய உணவு வழங்கப்பட்டது. இதில் வழக்கறிஞர் பாலசுப்பிரமணியன், மாவட்ட பிரதிநிதி ரமேஷ், சேவியர் சன் சுப்பையா உட்பட நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### சு.பெ. நீலகண்டன்

### ஆகஸ்ட் 8 (1999)



பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோரால் ஈர்க்கப்பட்டு, இளமைக் காலம் முதல் கழகத்தில் உறுப்பினராகி, ஆழ்வார்பேட்டை பகுதியில் கழகம் வளர்த்தவர்.

நான்கு முறை வட்டக் கழகச் செயலாளராகவும், வட்ட அவைத்தலைவர், மாவட்ட பிரதிநிதி ஆகிய பொறுப்பு வகித்தவர்.

1996ல் சென்னை மாநகராட்சி மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

இந்தி ஆதிக்க எதிர்ப்பு, சட்டநகல் எரிப்பு, இலங்கை தமிழர் ஆதரவு என கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**